மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி

முன்னிலை - **திருமதி V. பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் பங்குனி மாதம் 02-ம்நாள்
-------

**அசல் வழக்கு எண். 78/2021-ல் இடைமனு எண். 02/2021**

கலியபெருமாள் ...மனுதாரர்/ வாதி

...எதிர்...

1.மாதவன்
2. அய்யாறு
3. வெள்ளைச்சாமி ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 01.03.2022-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். சுந்தரய்யா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எ. ராஜேஷ்குமார் அவர்களும், 2,3-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். கார்த்திக்ராஜன் அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நன்கு பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வசம் வைத்துள்ள B, C , D அட்டவணைச் சொத்துக்களை பார்வையிட்டு அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்வதற்காக நிலஅளவையர் உதவியுடன் வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென உ.வி.மு.ச.கட்டளை 26, விதி 9–ன்படி இம்மனுவினை மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து "ஏ,பி,சி,டி" என நான்கு அட்டவணைகளாக பிராதில் காண்பிக்கப்பட்டுள்ளது. பிராது வரைபடத்தில் தாவா "ஏ" அட்டவணைச் சொத்து 'ABCD" எனவும், தாவா "பி" அட்டவணைச் சொத்து "BEFG" எனவும், தாவா "சி" அட்டவணைச் சொத்து "HIJK" எனவும், தாவா "டி" அட்டவணைச் சொத்து "LMNO" எனவும் காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா "ஏ" அட்டவணைச் சொத்தை மனுதாரர் 04.12.2006 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரையசாசனம் மூலம் வள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். தாவா "ஏ"

அட்டவணைச் சொத்தை மனுதாரா் கிரையம் பெற்றிருந்தபோதிலும் மனுதாரரும், மனுதாாின் சகோதரா் முத்துமாணிக்கமும் தனித்தனியாக வீடு கட்டிக்கொண்டு வசித்து அனுபவித்து வருகிறாா்கள். எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் தாவாச்சொத்து உள்ள கிராமத்தைச் சோ்ந்தவா்கள். மனுதாரா்/ வாதி ஊாில் இல்லாததை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட எதிா்மனுதாரா்கள்/ பிரதிவாதிகள் 2018–ம் ஆண்டு டிசம்பா் மாதத்தில் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் அத்துமீறி ஆக்கிரமித்து கூரை வீடு கட்டியுள்ளாா்கள். அவ்வாறு முதல் எதிா்மனுதாரா் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் தென்வடல் 30 அடியும், கீழ்மேல் 20 அடியும் கூடுதல் 600 சதுரடி இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளாா் அது தாவா "பி" அட்டவணைச் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. 2–ம் எதிா்மனுதாரா் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் தென்வடல் 20 அடியும், கீழ்மேல் 15 அடி கூடுதல் 300 சதுரடி ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளாா். அது தாவா "சி" அட்டவணைச் சொத்தாகும். 3–ம் எதிா்மனுதாரா் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் தென்வடல் 20 அடியும், கீழ்மேல் 15 அடியும் கூடுதல் 300 சதுரடி ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளாா். அது தாவா "டி" அட்டவணைச் சொத்தாகும். அவ்வாறு எதிா்மனுதாரா்கள் மனுதாராின் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தின் ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டியுள்ளதை அகற்றி மனுதாரா் வசம் "பி,சி,டி" அட்டவணைச் சொத்துக்களை ஒப்படைக்க வேண்டுமெனக்கேட்டும் எதிா்மனுதாரா்கள் மறுத்துவிட்டனா். தாவா "பி,சி,டி" அட்டவணைச் சொத்துக்களைப் பொறுத்து எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புதாரா்கள் ஆவாா்கள். தாவாச் சொத்துக்களில் எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்விதமான உாிமையோ, பாத்தியமோ கிடையாது. எனவே தாவா "பி" அட்டவணைச் சொத்திலிருந்து 1–ம்எதிா்மனுதாரரையும், தாவா "சி" அட்டவணைச் சொத்திலிருந்து 2–ம் எதிா்மனுதாரரையும், தாவா "டி" அட்டவணைச் சொத்திலிருந்து 3–ம் எதிா்மனுதாரரையும் வெளியேற்றி அதில் உள்ள கட்டுமானங்களை அகற்றி தாவாச்சொத்துக்கள் மனுதாரா் வசம் ஒப்படைக்க சுவாதீன மீட்பு பாிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பாிகாரம் கோாி மனுதாரா்/வாதி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளாா். எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ள தாவா "பி,சி,டி" அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணத்தை மனுதாரா்/வாதி தோராயமாக கொடுத்துள்ளாா். அதன் சாியான விஸ்தீரணத்தை கண்டறிய நிலஅளவை ஆணையா்உதவியுடன் வழக்கறிஞா் ஆணையா் ஒருவரை நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானது. எனவே எதிா்மனுதாரா்கள்/ பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வசம் வைத்துள்ள B, C , D அட்டவணைச் சொத்துக்களை பாா்வையிட்டு அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்வதற்காக நிலஅளவையா் உதவியுடன் வழக்கறிஞா் ஆணையா் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமெனக் கோாி மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை

அனுமதிக்க வேண்டும்.

3. <u>**அசல் வழக்கில் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கு எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் சுருக்கம்**</u>

பிராது வரைபடம் உண்மைநிலைகளை காட்டக்கூடியது இல்லை. தாவா "ஏ" அட்டவணைச் சொத்தை மனுதாரர் 04.12.2006–ம் தேதியிட்ட கிரைய சாசனம் மூலம் வள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றது செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தாவா "ஏ" அட்டவணைச்சொத்தைக் கிரையம் பெற்றதாகக் கூறும் வள்ளி என்பவருக்கு தாவாச் சொத்தில் எவ்விதமான உரிமையும், அனுபவமும் இல்லை. உரிமை இல்லாத நபரிடம் மனுதாரர் பெற்ற கிரையம் செல்லத்தக்கதல்ல. தாவா சொத்தான நத்தம் மனை நத்தம் நிலவரித்திட்டத்தின்படி இதுநாள்வரை கே.எஸ்.பி. அகோரம்பிள்ளை பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தை டிசம்பர் 2018–ல் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து கூரைவீடு கட்டியுள்ளதாக கூறுவது மறுக்கப்படுகிறது. தாவா சொத்துக்களில் பல பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக உண்மை உரிமையாளர்களின் எவ்வித இடையூறும் இன்றி உண்மை உரிமையாளரின் முழு மன அனுமதியுடன் வீடு கட்டி எதிர்மனுதாரர்கள் குடியிருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். எதிர்மனுதாரர்கள் 2018–ம் ஆண்டு டிசம்பர்மாதத்தில் ஆக்கிரமித்ததாக வழக்கிற்காக கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் பல பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருவதால் தொடர் அனுபவத்தினர் என்ற அடிப்படையில் அனுபவ உரிமைப்பட எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்து உரிமையுடையது. மனுதாரர் பிராதில் குறப்பிட்டுள்ள அளவுகள் சரியல்ல. மேற்படி அளவுகள் உண்மைத் தன்மையை காட்டக்கூடியதாக இல்லை. தாவா "பி,சி,டி" அட்டவணைச்சொத்துக்களைப்பொறுத்து எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்புதாரர்கள் அல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>**அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3–ம் பிரதிவாதியால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கு எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் சுருக்கம்**</u>

மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். பிராது வரைபடம் உண்மைநிலைகளை காட்டக்கூடியது இல்லை. தாவா "ஏ" அட்டவணைச் சொத்தை மனுதாரர் 04.12.2006–ம் தேதியிட்ட கிரைய சாசனம் மூலம் வள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றது செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தாவா "ஏ" அட்டவணைச்சொத்தைக் கிரையம் பெற்றதாகக்

கூறும் வள்ளி என்பவருக்கு தாவாச் சொத்தில் எவ்விதமான உரிமையும், அனுபவமும் இல்லை. உரிமை இல்லாத நபரிடம் மனுதாரர் பெற்ற கிரையம் செல்லத்தக்கதல்ல. தாவா சொத்தான நத்தம் மனை நத்தம் நிலவரித்திட்டத்தின்படி இதுநாள்வரை கே.எஸ்.பி. அகோரம்பிள்ளை பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தை டிசம்பர் 2018-ல் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து கூரைவீடு கட்டியுள்ளதாக கூறுவது மறுக்கப்படுகிறது. தாவா சொத்துக்களில் பல பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக உண்மை உரிமையாளர்களின் எவ்வித இடையூறும் இன்றி உண்மை உரிமையாளரின் முழு மன அனுமதியுடன் வீடு கட்டி எதிர்மனுதாரர்கள் குடியிருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். எதிர்மனுதாரர்கள் 2018-ம் ஆண்டு டிசம்பர்மாதத்தில் ஆக்கிரமித்ததாக வழக்கிற்காக கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் பல பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருவதால் தொடர் அனுபவத்தினர் என்ற அடிப்படையில் அனுபவ உரிமைப்பட எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்து உரிமையுடையது. மனுதாரர் பிராதில் குறப்பிட்டுள்ள அளவுகள் சரியல்ல. மேற்படி அளவுகள் உண்மைத் தன்மையை காட்டக்கூடியதாக இல்லை. தாவா "பி,சி,டி" அட்டவணைச்சொத்துக்களைப்பொறுத்து எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்புதாரர்கள் அல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6. இம்மனுவில் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

7. <u>தீர்வு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தை மனுதாரர் 04.12.2006-ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையசாசனம்மூலம் வள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அந்த கிரையத்தேதி முதல் தாவா "ஏ" அட்டவணைச்சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவாச்சொத்து அமைந்துள்ள கிராமத்தைச் சேர்ந்த எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் 2018-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மனுதாரர் ஊரில் இல்லாததை பயன்படுத்தி தாவா "ஏ" அட்டவணைச்சொத்தில் வீடு கட்டியுள்ளனர் என்றும்,தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் 1-ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்துள்ள பகுதியை "பி" அட்டவணையாகவும், 2-ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்த பகுதியை "சி" அட்டவணைச் சொத்தாகவும், 3-ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்த பகுதியை "டி" அட்டவணைச் சொத்தாகவும் பிராதில் காட்டியுள்ளதாகவும், தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துள்ள தாவா "பி,சி,டி" அட்டவணைச் சொத்தை தோராயமாக வழக்குரையில்

அளவுகள் குறிப்பிட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் ஆக்கிரமித்துள்ள பகுதியின் சரியான அளவுகளை கண்டறிவதற்காக நிலஅளவை உதவியுடன் வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது.

8. 1,2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா "ஏ" அட்டவணைச்சொத்தை மனுதாரர் 4.12.2006–ல் வள்ளி என்பவரிடம் பெற்ற கிரையம் செல்லாது என்றும், மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்ததாகக் கூறும் வள்ளி என்பவருக்கு தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் எவ்விதமான உரிமையும் இல்லை என்றும், தாவா "ஏ" அட்டவணைச்சொத்து நத்தம் மனை என்றும், தாவா சொத்திற்கு நத்தம் நிலவரித்திட்டத்தின்படி கே.எஸ்.பி. அகோரம்பிள்ளை என்பவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தில் 2018–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டவில்லை என்றும், தாவா சொத்துக்களை பல பன்னிரெண்டு வருடங்களாக உரிமையாளரின் இடையூறும் இன்றி எதிர்மனுதாரர்கள் அனுபவத்து வருவதால் தொடர் அனுபவத்தின் அடிப்படையில் தாவாச்சொத்து எதிர்மனுதாரர்களுக்கு உரிமையுடையது என்றும், எதிர்மனுதாரர்கள் தாவா "பி,சி,டி" அட்டவணைச் சொத்தைப்பொறுத்து ஆக்கிரமிப்புதாரர்கள் இல்லை என்றும்,தாவாச்சொத்துக்களை அளவீடு செய்வதற்கு நிலஅளவையர் உதவியுடன் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது.

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்குக் கோப்புக்களை பரிசீலனை செய்தபொழுது மனுதாரர்/வாதிக்கு தாவா "ஏ" அட்டவணைச்சொத்து 04.12.2006–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையசாசனம் மூலம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா "ஏ" அட்டவணைச்சொத்தில் 2018–ம் வருடத்தில் டிசம்பர் மாதத்தில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாகவும், அந்த ஆக்கிரமிப்பைப்பொறுத்து செயல் உறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி அசல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் 1–ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்த சொத்தை "பி" அட்டவணையாக தென்வடல் 30 அடியும், கீழ்மேல் 20 அடியும் ஆகக்கூடுதல் 600 அடியும், 2–ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்த சொத்தை "சி" அட்டவணைச் சொத்தாக தென்வடல் 20 அடியும், கீழ்மேல் 15 அடியும் ஆகக்கூடுதல் 300 சதுரடியும், 3–ம் எதிர்மனுதாரர் ஆக்கிரமித்த சொத்தை "டி" அட்டவணைச்சொத்தாக தென்வடல் 20 அடியும், கீழ்மேல் 15 அடியும் ஆகக்கூடுதல் 300 சதுரடியை ஆக்கிரமித்துள்ளதாக தோராயமாக வழக்குரையின் சொத்துவிவரத்தில் மனுதாரர் கூறியுள்ளதாகவும், மனுதாரருக்கு சொந்தமான தாவா "ஏ" அட்டவணைச் சொத்தில் 1 முதல் 3

எதிா்மனுதாரா்கள் ஆக்கிரமித்துள்ள தாவா "பி,சி,டி" அட்டவணைச் சொத்தின் சாியான அளவை கண்டறிவதற்காக நிலஅளவையா் உதவியுடன் வழக்கறிஞா் ஆணையா் ஒரு்வரை நியமனம் செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

10. எதிா்மனுதாரா்கள் தரப்பில் தாவா "ஏ" அட்டவணைச்சொத்தைப்பொறுத்து மனுதாரா் பெற்ற கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும், தாவாச்சொத்து நத்தம் நிலவாித்திட்டத்தின்கீழ் அகோரம்பிள்ளை என்பவருக்கு பட்டா வழங்கப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தை எதிா்மனுதாரா்கள் பல பன்னிரெண்டு ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் எதிாிடை பாத்தியம்மூலம் தாவாச்சொத்தின் உாிமை எதிா்மனுதாரா்களுக்கு வந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. எதிா்மனுதாரா்கள் தங்களது எதிருரையில் வழக்கில் வாதி குறிப்பிட்டுள்ள அளவுகள் சாியல்ல என்றும், "பி,சி,டி" சொத்தைப்பொறுத்து எதிா்மனுதாரா்கள் ஆக்கிரமிப்புதாரா்கள் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எதிா்மனுதாரா்கள் தரப்பிலேயே தாவாச்சொத்தின் அளவுகள் பிராதில் சாியாக கொடுக்கப்படவில்லை என்று கூறியுள்ள நிலையில் மனுதாரா் தாவா "பி,சி,டி" அட்டவணைச் சொத்துக்களை பாா்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமெனக் கோாியிருந்தாலும், தாவா "ஏ,பி,சி,டி" அட்டவணைச்சொத்து முழுவதையும் பாா்வையிட்டு அளவீடு செய்தால்தான் அது இவ்வழக்கின் தீா்வுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதுடன், அது வாய்மொழி சாட்சியங்களையும் குறைக்க உதவும் என்று இந்நீதிமன்றம் கருதி தாவா "ஏ,பி,சி,டி" அட்டவணைச் சொத்துக்களை பாா்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய நிலஅளவையா்உதவியுடன் வழக்கறிஞா் ஆணையா் ஒருவரை நியமனம் செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதிஅதன் பொருட்டு மனுதாரா் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவா்கள் செலவுத்தொகையை அவரவா்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முடிவுசெய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீா்வு காணப்படுகிறது.

இறுதியில் தாவா "ஏ" "பி" "சி" மற்றும் "டி" அட்டவணைச் சொத்துக்களை பாா்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞா் ஆணையராக திரு **M. காா்த்திக்,** வழக்கறிஞா் அவா்கள் நியமனம் செய்யப்படுகிறாா், அவருக்கு உதவியாக சீா்காழி தாலுக்கா நிலஅளவை உதவி ஆய்வாளா் நியமனம் செய்யப்படுகிறாா். வழக்கறிஞா் ஆணையா் ஊதியமாக ரூபாய் 6,000/- நிா்ணயம் செய்து அதனை மனுதாரரே நோிடையாக கொடுக்க வேண்டுமென்றும், நிலஅளவை உதவி ஆய்வாளாின் அரசு விதிகளின்படியான ஊதியத்தை மனுதாரரே கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞா்

ஆணையா் மற்றும் நிலஅளவை உதவி ஆய்வாளா் தாவா "ஏ" "பி" "சி" மற்றும் "டி" அட்டவணைச் சொத்துக்களை இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்து விாிவான வரைபடத்துடனும், அளவுகளுடனும் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞா் ஆணையா் மற்றும் நிலஅளவையா் அறிக்கை தாக்கல் செய்ய அழைக்க : **18.04.2022.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு மாா்ச் மாதம் 16-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உாிமையியல் நீதிபதி, சீா்காழி.

பின் இணைப்பு

மனுதாரா் தரப்பு சாட்சிகள் -இல்லை-

எதிா்மனுதாரா்கள் தரப்பு சாட்சிகள் -இல்லை-

மனுதாரா் தரப்பு சான்றாவணங்கள் -இல்லை-

எதிா்மனுதாரா்கள் தரப்பு சான்றாவணங்கள் -இல்லை-

மா.உ.நீ.

**நோிய/வரைவு உத்தரவு**
**அசல் வழக்கு எண்.** 78/2021-**ல்**
**இடைமனு எண்.** 02/2021
**நாள்** - 16.03.2022.